# 1 கயத்தாற்றில் சில கண்டு பிடிப்புகள்

வ. உ. சி. மாவட்டம் கோவில்பட்டி வட்டத்தில் அமைந்துள்ள கயத்தாறு, வீர பாண்டிய கட்ட பொம்மன் தூக்கிலிடப்பட்ட ஊரென்பதால் அனைவர்க்கும் அறிமுகனான ஊரேயாகும். இவ்வூரில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பஞ்சபாண்டியர் ஆண்டிருக்கின்றனர். அவர்களை மதுரை நாயக்க அரசன் விசுவநாத நாயக்கன் வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். விசுவநாத நாயக்கரிடத்துத் தளவாயாக இருந்த அரிய நாயக முதலியார் அப்போரில் முதன்மையான பங்கு வகித்திருக்க வேண்டும், கயத்தாற்றில் கட்ட பொம்மன் நினைவு மண்டபத்துக்கு வடக்கே, சாலையோரத்தில்சிறிய மண்டபம் ஒன்று உள்ளது.

கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள இம்மண்டபத்தை இப் பகுதி வாழ் மக்கள் தளவாய் மண்டபம் என வழங்கு கின்றனர். இம்மண்டபத்தில் மனித உருவச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன நாயக்க மன்னர் பாணியில் அமைந் துள்ள இச்சிற்பங்கள், தளவாய் அரிய நாயக முதலியாரை யும் அவருடைய உறவினர்களையும் சித்திரிக்கின்றன போலும். இன்றும் இப்பகுதியில் தளவாய் முதலியார் வம்சத்தவர் வாழ்ந்து வருகின்றனர்.

கயத்தாறு என்ற பெயர், கயிற்றாறு என வழங்கப் பட்ட ஆற்றின் பெயரால் ஊருக்குச் சூட்டப் பட்டிருக்க

லாம். தற்போது இந்தஆறு உப்போடை என வழங்கப் படுகிறது. இந்த ஆற்றின் கரையில் கோதண்டராமீஸ்வரர் கோயில் எனப்படும்சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலின் வெளித்திருச் சுற்றின் மேற்கில், கி. பி. 14 ஆம் நூற்றாண்டைய எழுத்தமைதியுடன் துண்டுக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

ஸ ஸி ஸ்ரீ குலசேகர தேவற்கு......
வ து

டுரு யு 14வது ஆசி நாட்டு வில்லிந......

உடையார் திருமாணிக் கே ஶ......
வ

...டயார் கோயில் ...வ...ா ஹ ணரே......
ஶ

ரோம் இவ்வூரில் இருக்கும் வியாபாரிக......
ளமலூருடையான் ஆண்டான்......

என்ற வாசகங்கள் இத்துண்டுக் கல்வெட்டில் காணப் படுகின்றன.

இக்கோயிலினுள்ளே, முதல் திருச்சுற்றின் வடமேற்குப் பகுதியில் தேவி சிற்பத்துக்கு அருகிலுள்ள தூணில், கி. பி. 15 ஆம் நூற்றாண்டைய எழுத்தமைதியுடன் கல் வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.

இத் தூன்
தனியன்
தம்பிக்கு
நல்லானா
ன தமிழ
தரையன்
தன்மம்

எனப் பொறிக்குப் பட்டுள்ளது. (தூண் என்பது, தூன் எனப்பிழையாக எழுதப்பட்டுள்ளது.) இக்கல் வெட்டுகள் தளவாய்அரிய நாயக முதலியாரின் காலத்துக்கு முற்பட்டவையாதலால் பஞ்ச பாண்டியார் ஆட்சிக் காலத்ததைச் சேர்ந்தவை யெனக் கொள்ளலாம்.